COMMISSIONER
CHEPAUK
17 JUN 2022
CHENNAI

6309

சுருக்கம்

தமிழ்நாடு பூமிதான வாரியம் – பூமிதான வாரிய சட்டத்தின் கீழ் தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் – வாரியம் மறுசீரமைப்பு ஆணை வெளியிடப்படுகிறது

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
நிலச் சீர்திருத்த அலகு [நி.சீ.1(1)] பிரிவு

அரசாணை (நிலை) எண். 263 **நாள்: 13.6.2022**

K1

சுபகிருது வருடம், வைகாசி –30
திருவள்ளுவர் ஆண்டு–2053

படிக்கப்பட்டது–

1. அரசாணை (நிலை) எண்.40, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 07.02.1997.
2. அரசாணை (நிலை) எண்.238, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04.09.2000.
3. அரசாணை (நிலை) எண்.144, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 11.10.2006.
4. அரசாணை (நிலை) எண்.493, வருவாய்த் [நி.சீ.1(1)] துறை, நாள் 23.12.2009.
5. அரசாணை (நிலை) எண்.99, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை நிலச்சீர்திருத்த அலகு [நி.சீ.1(1)] பிரிவு, நாள். 7.3.2018.
6. முதன்மைச் செயலாளர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், கடிதம் எண்.எஸ்.கே1 /13007/2021 (பூ.வா), நாள் 03.12.2021, 25.01.2022 மற்றும் 25.03.2022.

ஆணை:–

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 (1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV)–இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்தை திருத்திய முறையில் அமைக்கும் பொருட்டு முன்னாள் மாண்புமிகு கதர் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் அவர்களை தலைவராகவும் மற்றும் 4 அலுவல் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்டும் 4 ஆண்டுகளுக்கு நியமனம் செய்து புதிய வாரியம் செயல்பட ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 (1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV) பிரிவு 4, உட்பிரிவு (1) இன்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு 7 அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. இதன்படி தமிழ்நாடு

Verified RealEstate™

பூமிதான வாரியம் அதன் தலைவர் நீங்கலாக நான்கு அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் 7 அலுவல் சாரா உறுப்பினர்கள் பணியாற்றும் வகையில் திருத்தி அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவி காலம் 06.2.2001 உடன் முடிவடைந்தது.

3. மேலே மூன்றவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு பூமிதான வாரியத்தில் உள்ள பணியிடங்கள் நிலங்கள் மற்றும் நிதியையும் ஊரக வளர்ச்சி துறையின் கட்டுப்பாட்டில் இருந்த பொருண்மையையும் வருவாய் நிலச்சீர்திருத்தத் துறை ஆணையரின் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்தும், வருவாய் நிலச் சீர்திருத்தத் துறையைச் சார்ந்த பணியாளர்களை அவ்வாரியத்தில் பணியமர்த்தம் செய்யும் வரை, பூமிதான வாரியத்தில் பணிபுரியும் உதவியாளர் முதலான பூமிதான ஆய்வாளர்கள் வரையிலான ஊரக வளர்ச்சி மற்றம் ஊராட்சி துறையை சேர்ந்த 19 பணியாளர்களை பணிமாறுதல் (Deputation) அடிப்படையில் பூமிதான வாரியத்திலேயே தொடரவும் ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி தமிழ்நாடு பூமிதான வாரியம் முன்னாள் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் தலைமையில் 4 அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் பூமிதான இயக்கம் குறித்து நன்கு தெரிந்த சர்வோதய தலைவர்கள் / சமூக சேவகர்கள் மற்றும் அதிக அளவில் பூமிதானம் அளித்த தானதாரர்கள் மற்றும் அவர்களது வாரிசுகள் தேர்வு செய்யப்பட்டு 10 அலுவல் சாரா உறுப்பினர்களை கொண்டு நான்கு ஆண்டுகளுக்கு நியமனம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பூமிதான வாரியத்தை புதுப்பித்தும் புதிய அலுவலர் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை நியமனம் செய்தும் ஆணை வெளியிடப்பட்டது. இப்பதவி காலம் 27.03.2022 முடிவடைந்துள்ளது.

6. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில் தமிழ்நாடு பூமிதான வாரியத்தை மறுசீரமைப்பு செய்யவும் புதிய அலுவல் சார் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களை நியமனம் செய்ய ஏதுவாக நிலச்சீர்திருத்த ஆணையர் அலுவல் சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களின் பட்டியலை அரசின் பரிசீலினைக்கு அனுப்பி வைத்ததுடன், கூடுதலாக 4-8 நபர்கள் அலுவல் சாரா உறுப்பினர்களை தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு நியமனம் செய்து கொள்ளலாம் என தெரிவித்து அலுவல்சார் உறுப்பினர்கள் மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்களின் பெயர் பட்டியலை அனுப்பி வைத்துள்ளார்.

7. நிலச்சீர்திருத்த ஆணையரின் செயற்குறிப்பை ஆய்வு செய்து அதனடிப்படையில் தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம் 1958 (1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XV) பிரிவு 4, உட்பிரிவு (1) இன்படி தமிழ்நாடு பூமிதான

வாரியத்தை மீண்டும் அமைக்கும் பொருட்டு மாண்புமிகு அமைச்சர், கைத்தறி, மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் தலைமையில், கீழே வரிசை எண்கள் 2 முதல் 6 வரையில் உள்ள ஐந்து (5) நபர்களை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும், கீழே வரிசை எண்கள் 7 முதல் 11 வரையில் உள்ள ஐந்து (5) நபர்களை அலுவல் சார உறுப்பினர்களாகவும் ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நான்கு (4) ஆண்டுகளுக்கு நியமனம் செய்து அரசு ஆணையிடுகிறது.

அலுவல்சார் உறுப்பினர்கள்:-

வ.எண்	பெயர் மற்றும் பதவி	நியமனம் செய்யப்படும் பதவி
1.	மாண்புமிகு அமைச்சர், கைத்தறி, மற்றும் துணிநூல் துறை	தலைவர்
2.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர்	உறுப்பினர்
3.	முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர்	உறுப்பினர்
4.	நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர் / கூடுதல் ஆணையர்	உறுப்பினர் செயலர்
5.	வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை இயக்குநர்	உறுப்பினர்
6.	தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்	உறுப்பினர்

அலுவல் சாரா உறுப்பினர்கள்

வ. எண்	பெயர் மற்றும் பதவி	நியமணம் செய்யப்படும் பதவி
7.	திரு என்.சுந்தரராஜன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
8.	திரு எஸ்.லோகநாதன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
9.	திரு.கே.ஆர்.கண்ணன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
10.	செல்வி கே.எஸ்.நீலா (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்

Verified RealEstate

11.	திரு.அ. உறுமாத்தான் தலைவர், (LAFTI) இயக்கம், தலைவர், சர்வோதய மண்டல், சிவகங்கை மாவட்டம்.	உறுப்பினர்

8. கீழே குறிப்பிட்டுள்ள அறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும்.

அறிவிக்கை.

தமிழ்நாடு பூமிதான வாரியச் சட்டம், 1958 (1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் **XV**) பிரிவு 4, உட்பிரிவு (1)–ன்படி, தமிழ்நாடு பூமிதான வாரியத்திற்கு **மாண்புமிகு கைத்தறி, மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** அவர்களை தலைவராகவும் மற்றும் கீழே வரிசை எண்கள் 2 முதல் 6 வரையில் உள்ள ஐந்து (5) நபர்களை அலுவல் சார்ந்த உறுப்பினர்களாகவும், கீழே வரிசை எண்கள் 7 முதல் 11 வரையில் உள்ள ஐந்து (5) நபர்களை அலுவல் சாரா உறுப்பினர்களாகவும், ஆணை வெளியிடப்படும் நாளிலிருந்து நான்கு ஆண்டுகளுக்கு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் நியமனம் செய்கிறார்.

வ.எண்	பெயர் மற்றும் பதவி	நியமணம் செய்யப்படும் பதவி
1.	மாண்புமிகு அமைச்சர், கைத்தறி, மற்றும் துணிநூல் துறை	தலைவர்
2.	வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர்	உறுப்பினர்
3.	முதன்மைச் செயலாளர் / நிலச்சீர்திருத்த ஆணையர்	உறுப்பினர்
4.	நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர் / கூடுதல் ஆணையர்	உறுப்பினர் செயலர்
5.	வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை இயக்குநர்	உறுப்பினர்
6.	தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர்	உறுப்பினர்
7.	திரு என்.சுந்தரராஜன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
8.	திரு எஸ்.லோகநாதன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
9.	திரு.கே.ஆர்.கண்ணன் (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்
10.	செல்வி கே.எஸ்.நீலா (முன்னாள் வாரிய உறுப்பினர்)	உறுப்பினர்

Verified by RealEstate™

11.	திரு.அ. உறுமாத்தான் தலைவர், (LAFTI) இயக்கம், தலைவர், சர்வோதய மண்டல், சிவகங்கை மாவட்டம்.	உறுப்பினர்

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், அரசு எழுது பொருள் மற்றும் அச்சுத்துறை,
110, அண்ணா சாலை, சென்னை–600 002.
[பத்தி 8 மட்டும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட வேண்டும்]
மாண்புமிகு கைத்தறி, மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள், தலைமைச்செயலகம்,
சென்னை 600 009,
முதன்மைச் செயலாளர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம்,
சென்னை–600 005.
முதன்மைச் செயலாளர் , வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600 009.
நிலச்சீர்திருத்தத்துறை இயக்குநர், சென்னை–600 005
வேளாண்மை மற்றும் உழவர்நலத்துறை இயக்குநர், சென்னை–600 005
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர். சென்னை–600 005.
செல்வி கே.எஸ். நீலா, 1/72, நேருஜி நகர், முதல் வார்டு, சின்னாளபட்டி,
திண்டுக்கல் மாவட்டம்.
திரு என். சுந்தரராஜன், சர்வோதயா இல்லம், மேட்டுபெருமாள் நகர், வாடிப்பட்டி,
மதுரை மாவட்டம்–625 218.
திரு கே.ஆர். கண்ணன், நல்லுகுறிச்சி (தபால்), அபிராமம், முதுகுளத்தூர் தாலுகா,
ராமநாதபுரம் மாவட்டம்–623 601.
திரு எஸ்.லோகநாதன், 279, அவ்வை சண்முகம் சாலை, இராயப்பேட்டை,
சென்னை–600 014.
திரு. அ. உறுமாத்தான். பொதுசெயலாளர், எண். 5 / 357, கிராமதான நிர்மான சங்கம்,
சோலை நகர், காமராஜர் காலனி, மேலு ர் ரோடு, சிவகங்கை,
சிவகங்கை மாவட்டம்– 630 561

நகல்

முதன்மைச் செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சென்னை–600 005.
முதன்மைச் செயலர் மற்றும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட ஆணையர்,
சென்னை–600 005.
முதன்மைச் செயலர் / ஆணையர், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற
நிலவரித்துறை சென்னை–600 005.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.

Verified RealEstate ™